# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 01 திங்கட்கிழமை 17.07.2023 கதிர் 30



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# அரச வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மரணங்கள் விசாரணைகளை மேற்கொள்ள ஐவர் கொண்ட குழு

## சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

அரச வைத்தியசாலைகளில் கடந்த சில நாட்களுக்குள் ஏற்பட்டுள்ள மரணங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள ஐந்து பேர் கொண்ட குழுவொன்றை சுகாதார அமைச்சர் அமைக்கவுள்ளதாக, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த நிபுணர் குழுவில் மருத்துவம், ஒவ்வாமை ஆகிய இரண்டிலும் விரிவான அறிவும் புரிதலும் உள்ள பேராசிரியர்கள் உட்பட ஐந்து பேர் இடம் பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவானது அரச மருத்துவமனைகளில் நடந்த அனைத்துச் சர்ச்சைக்குரிய மரணங்கள் குறித்தும் முழு விசாரணை நடத்தி, அமைச்சரிடம் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

இந்தக் குழுவினால் வழங்கப்படும் அறிக்கை, நாட்டில் உள்ள வைத்தியசாலை அமைப்பில் உள்ள மக்களுக்குச் சிறந்த சுகாதார சேவைகளை வழங்குவதற்கு உதவிகரமாக இருக்கும் என சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் அனைவரும் குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்பதே சுகாதாரத்துறையின் எதிர்பார்ப்புஎன்றும் அவர் குறிப்பிட்டார்.

2 ▶

# வடகிழக்கை நிர்மூலமாக்கியது சிங்கள ஆட்சியாளர்ககள்தான்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை



தமிழர் தாயகத்தை நிர்மூலமாக்கியதற்குப் பெயர்தான் அபிவிருத்தியா? என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

அண்மையில் போக்குவரத்து அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன இந்தியா

2 ▶

# டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் போராட்டம் நேரில் சந்தித்து உரையாடினார் கஜேந்திரன்



வட மாகாண டெங்கு ஒழிப்பு உதவியாளர் கள் வட மாகாண சபை முன்பாக கவனவீர்ப்புப் போராட் டத்தில் இன்று ஈடுபட்டனர். சம்பள உயர்வு மற்றும் நிரந்தர நியமனம் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போ ராட்டத்தை அவர்கள் நடத்தினர்.

அவர்களை நேரில் சென்று சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், அவர்களோடு

2 ▶

# நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைன் கொண்டுவந்து அரசை மேலும் பலப்படுத்தப்போகிறது எதிர்க்கட்சி

## நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில

சுகாதார அமைச்சருக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானமானது, அரசாங்கத்தைப் பலப்படுத்தும் வகையில் அமைந்துவிடக்கூடாது, என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் இன்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், சுகாதாரதுறை மீது மட்டுமன்றி, அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையும் மக்கள் மத்தியில் இன்று இல்லாது போயுள்ளது.

அரசாங்கத்திற்குள் இன்று கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில், எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, அரசாங்கத்தை மீண்டும் ஒற்றுமைப் படுத்தி, பலப் படுத்தி விடக்கூடாது.

நாடாளுமன்றில் இறுதியாக இடம்பெற்ற இரண்டு வாக்கெடுப்பிலும் அரசாங்கம்தான் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றது.

2 ▶

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதிர்கொள்வதற்கு நான் தயார்

## அமைச்சர் கெஹெலிய உறுதி



எந்தவொரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் எதிர்கொள்ளத் தயார்!, என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நாங்கள் எங்கள் கடமைகளைச் செய்வதற்குத் தவற மாட்டோம்!, என உத்தரவாதம் அளிக்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர், நாடாளுமன்றத்தில் தனக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொள்ளத் தயார் எனவும்,

பொறுப்பினைக் கைவிட்டு ஓடுவதற்குப் பதில் நம்பிக்கையில்லாத்

2 ▶

# கனேடிய உயர்ஸ்தானிகரை சந்தித்தார் சிறிதரன் எம்.பி



இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் உயர்ஸ்தானிகர் எரிக்வோல்சுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்றைய

2 ▶

# கொழும்பு தேசிய வைத்தியசாலை பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது!

கொழும்பு, ஜூலை 17

நாடளாவிய ரீதியில் உள்ள வைத் தியசாலைகளுக்கு தரமற்ற மருந்துகளை வழங்குவதற்கு எதிராக இன்று முதல் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பல மருத்துவமனைகளைச் சேர்ந்த சுகாதாரத்துறை ஊழியர்களின் பங்கேற்புடன் இன்று பிற்பகல் ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப் படவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் எஸ்.பி.மடிவத்த தெரிவித்திருந்தார். இதற்கிடையில், போராட்டம் முன்னெடுக்கப்படுவதன் காரணமாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையைச் சுற்றி பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## கனேடிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தினம் நாடாளுமன்ற உறுப்பினரின் யாழ்ப்பாண இல்லத்தில்நடைபெற்றுள்ளது.

இந்தச்சந்திப்பின் ஆரம்பத்தில், ஈழத்தமிழர்கள் நலன்சார் செயற்பாடுகளிலும், இன அழிப்புக்கான நீதிகோரல் செயன்முறையிலும் கனடா அரசாங்கம் தொடர்ச்சியாக குரல்கொடுத்து வருவதற்கு தனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குறிப்பிட்டிருந்தார்.

இதன்போது, இலங்கையில் நடைபெற்றது இன அழிப்புத்தான் என்பதையும் அதற்குரிய நீதி நிலைநாட்டப்பட வேண்டும் எனபதையும் வலியுறுத்தி, கனேடிய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக, அப்பிரேரணைக்கு வலுச்சேர்க்கும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக்கிளையினால் நடாத்தப்பட்ட நிகழ்வையும் கனேடிய உயர்ஸ்தானிகர் நினைவுகூர்ந்திருந்தார்.

ஈழத்தமிழரகளின் அரசியல் உரித்துகளை நிலைநாட்டுதல், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வொன்றின் காலத் தேவை, 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கும் சமஸ்டி முறைமைக்கும்இடையிலான நடைமுறை வேறுபாடுகள், 13ஆவது திருத்தச் சட்டத்தை புறந்தள்ளி சமஸ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்கவேண்டியதன் நியாயப்பாடுகள் பற்றிய உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

கனடா, அமெரிக்கா, பெல்ஜியம் போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் சமஸ்டி முறைமையை அடிப்படையாகக்கொண்டு, அதிலும் குறிப்பாக பல்லின சமூகங்கள் வாழும் கனேடிய நாட்டைப் பின்பற்றி இலங்கையில் சமஸ்டியை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ள யதார்த்தப் புறநிலைகள், 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் இருக்கத்தக்கதாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண அரசுக்கு வழங்கப்பட்டிருந்தும் கூட, வடக்கு கிழக்கின் 80 வீதமான நிலங்கள் வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கடலோர காவல் திணைக்களம், கனியவளத் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றால் தொடர்ச்சியாக பறிக்கப்படுகின்றமை, இன, மத, மொழி ரீதியான வலிந்த ஆக்கிரமிப்புகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இவைதவிர இலங்கையில், அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் பெண்களின் அரசியல் வகிபாகம் மிகக்குறைந்தளவில் காணப்படுவதன் காரணம் குறித்தும் அதன் யதார்த்தநிலைப் பின்னணிகள், குடும்ப மற்றும் சமூகச் சூழல் என்பவை குறித்தும் கனேடிய உயர்ஸ்தானிகர், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடம் கேட்டறிந்து கொண்டார்.

அதேவேளை, போருக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள 4374.8 ஏக்கர் காணிகள் தொடர்பான விவரமும், 2009 க்குப் பின்னர் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அடாத்தாக அபகரித்து, அவ்விடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 71 விகாரைகள் குறித்த விவரண அறிக்கையும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனால், கனேடிய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன.

## நம்பிக்கையில்லாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்க்கட்சியில் பலர் எந்த வாக்கெடுப்பிலும் கலந்துகொள்ளவில்லை.

இவ்வாறான பின்னணியில், சுகாதார அமைச்சருக்கு எதிராக எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தால், அது அரசாங்கத்தைப் பலப்படுத்தும் வகையில்தான் அமையும், எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.




## வடகிழக்கை ...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...
வழங்கிய சில பேருந்துகளை இலங்கைப் போத்துவரத்துச்சபையின் யாழ்ப்பாணக் கிளைக்குக் கையளிப்பதற்காகவும் இந்தியக் கடனுதவியின் கீழ் புனரமைக்கப்பட்ட அனுராதபுரம் - ஓமந்தை ரயில்பாதை யில் தொடருந்தை வெள்ளோ-ட்டம் பார்ப்பதற்காகவும் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

அதன்போது, இலங்கை பெறுகின்ற பல்வேறு கடன் திட்டங்களில் மிகப்பெரும் பகுதி வடக்கு - கிழக்கிற்கே செலவழிக்கப்படுகிறது, என அவர் கூறியிருந்தார்.

அமைச்சரின் கருத்திற்குப் பதிலளிக்கும் வகையில் சுரேஷ் பிரேமச்சந்தி ரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் மேற்சொன்னவாறு கேள்வியை முன்வைத்துள்ளாார்.

வடக்கு கிழக்கில் வீதிகள் புனரமைப்பு, மின்சார வசதி, தொலைத்தொடர்புகள், தொடருந்துச் சேவை போன்ற பல பணிகளுக்காக கடன் உதவிகள் செலவு செய்யப்பட்டதாக அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன உண்மையை உணர்ந்துகொண்டு பேசுவது நல்லது. இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்ட யுத்தத்திற்கு முன்பாக, வடக்கு - கிழக்கில் மின்சாரம் இருந்தது. தொலைத் தொடர்பு சேவைகள் இருந்தன. ரயில் போக்குவரத்து இருந்தது. குறைகள் இருந்தபோதும் பல்வேறுபட்ட உட்கட்டமைப்பு வசதிகள் இருந்தன.

யுத்தத்தின்போது ரயில் தண்டவாளங்களும் சிலீப்பர் கட்டைகளும் இராணுவத்தினரால் பிடிங்கி எடுக்கப்பட்டு நூற்றுக்கணக்கான பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டன. இவற்றிற்கு மேலதிகமாக ஆயிரக்கணக்கான பனை மற்றும் தென்னை மரங்கள் தறிக்கப்பட்டு, அவையும் பதுங்கு குழிகள் அமைப்பதற்காக இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்டன.

தென்பகுதியிலிருந்து வடக்குக்குக் கிடைத்த மின் சாரம் அரசாங்கத்தினால் துண்டிக்கப்பட்டது. தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. வடக்கு - கிழக்கில் இருந்த தொழிற்சாலைகளும் நெல் களஞ்சியப்படுத்தும் இடங்களும் அரிசி ஆலைகளும் நிர்மூலமாக்கப்பட்டன.

மருத்துவத் தேவைகளுக்குப் பற்றாக் குறைகள் ஏற்படுத்தப்பட்டது. வடக்கிற்கு எரிபொருட்கள் தடைசெய்யப்பட்டிருந்தன.

இலங்கை இராணுவத்தினராலும் விமானப்படையினராலும் ஒட்டுமொத்தமான கட்டுமானங்களும் நிர்மூலமாக்கப்பட்டு, தமிழ் மக்கள் மெழுகுதிரி வெளிச்சத்திலேயே தமது அன்றாட வாழ்க்கையை நடத்தவேண்டிய நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இவை ஒருபுறமிருக்க, பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமதியான இராணுவத் தளபாடங்கள், குண்டுவீச்சு விமானங்கள், பீரங்கிகள், கவச வாகனங்கள், கடற்படைக்கான கப்பல்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக கடந்த முப்பது ஆண்டுகளாக பல பில்லியன் டொலர்கள்

கடன் உதவி உலகின் பல நாடுகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

உள்நாட்டில் பேசித் தீர்க்க வேண்டிய ஒரு விடயத்தை, யுத்தமாகப் பிரகடனப்படுத்தி, போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்!, என்று ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் அவரது வழித்தோன்றலான ரணசிங்க பிரேமதாச, அவருக்குப் பின்னர் சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க அவரது வழித்தோன்றலான மகிந்த ராஜபக்ச ஆகியோர் காலத்திலும் இந்த யுத்தம் தொடர்ந்தது.

இந்தக் காலக்கட்டத்தில் சில ஆயிரங்களாக இருந்த பாதுகாப்புத் தரப்பினர் பல இலட்சங்களாக உயர்த்தப்பட்டனர். இலங்கையின் உள்நாட்டு வருமானத்தின் மிகப்பெரும் பகுதி யுத்தத்திற்கே செலவு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக வாங்கப்பட்ட கடன்களும் இதற்காகவே செலவு செய்யப்பட்டன.

இவை மட்டுமன்றி, வடக்கிற்கு மகாவலி நீரை அனுப்புகிறோம், என்ற பெயரில் வெளிநாடுகளிலிருந்து கடன் பெறப்பட்டு தமிழர்களின் காணிகள் பறிக்கப்பட்டு அங்கு சிங்களக் குடியேற்றங்களும் நடந்தேறின. அதன் பிரகாரம் உருவாகியதுதான் வெலிஓயா என்று தற்பொழுது பெயர் மாற்றம் பெற்றுள்ள மகாவலி 'எல்' வலயம். வடக்கு - கிழக்கில் இருந்த உட்கட்டுமான வசதிகளை அழித்தொழிப்பதற்கும் தமிழ் மக்களின் பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் துவம்சம் செய்வதற்கும் அந்தப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்காகவுமே இந்தக் கடனுதவிகள் பயன்படுத்தப்பட்டனவே தவிர, தமிழ் மக்களின் அபிவிருத்திக்காக அல்ல என்பதை அமைச்சருக்கு நினைவூட்டுகிறோம், என குறித்த அறிக்கையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அமைச்சர் கெஹெலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீர்மானத்தை எதிர்கொள்வேன் எனறும் தெரிவித்துள்ளார்.

நாங்கள் எங்கள் கடமைகளைச் செய்வ தற்கு தவறமாட்டோம்என உத்தரவாதம் அளிக்கின்றேன் எனத் தெரிவித்துள்ள அமைச்சர், அவ்வாறானதொரு காலம் இருந்தது. ஆனால், நாங்கள் சவால்களை எதிர்கொண்டு மக்களுக்குச் சேவையாற்றுவோம் எனவும் உறுதிபடக் கூறியுள்ளார்.

## டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் போராட்டம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரையாடி அவர்களது பிரச்சனைகள் தொடர்பான தகவல்களையும் பெற்றுக் கொண்டார். 2016 ஆண்டு முதல் வட மாகாணத் தில் 82 டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் நிய மிக்கப்பட்டு 22,000 ரூபா வீதம் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறபோதிலும் அதில் எந்தவித மாற்றங்களும் செய்யப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

வட மாகாண பிரதம செயலர் எஸ். எம். சமன் பந்துலசேனவிடம் மகஜர் ஒன்றையும் போராட்டக்காரர்கள் கை-யளித்தனர்.

## அரச வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்தோடு, நோயாளர்களுக்கு வைத்தியசாலைகளினால் வழங்கப்படும் சுகாதார சேவைகள் சீர்குலைந்திருக்கவில்லை எனவும் பணிப்பாளர் நாயகம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நாவாலியூர் சோமசுந்தரப் புலவரைப் போற்றி ஆடிப்பிறப்பு நாளில் யாழ்ப்பாணத்தில் நிகழ்வு

ஆடிப்பிறப்பு நாளில் நாவாலியூர் சோமசுந்தரப் புலவரைப் போற்றி வழிபடும் முகமாக விசேட நிகழ்வொன்று யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

தங்கத் தாத்தா பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாகவுள்ள நாவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிலையடியில் இன்று காலை குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, நாவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிலைக்கு மாலை மற்றும் சால்வை அணிவித்து பூக்கள் தூவப்பட்டன. ஆடிப்பிறப்பு விசேட உணவுப் பண்டமான ஆடிக்கூழ் தயாரிக்கப்பட்டு அப்பகுதியில் நின்ற பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் ஆடிப்பிறப்பு நாளில் நாவாலியூர் சோமசுந்தரப் புலவரைப் போற்றும் வகையில் நிகழ்வை மேற்கொள்ள அனைவரும் முன்வர வேண்டும் என தங்கத் தாத்தா பேரவையின் ஒருங்கிணைப்பாளர் கே.எஸ்.சிவஞானராஜா அழைப்பு விடுத்தார்.




## யாழ்ப்பாணம் பொதுசன நூலக ஏற்பாட்டில் வெளியீட்டு விழா



புலம்பெயர்ந்து வாழ்கின்ற நூலசிரியரான என். செல்வராஜா அவர்களால், யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் தொடர்பாக எழுதப்பட்ட RISING FROM THE ASHES யாழ்ப்பாணப் பொது நூலகம் ஆகிய தலைப்புக்களிலான இரு நூல்கள், யாழ் பொது சன நூலக ஏற்பாட்டில் வெளியிடப்படவுள்ளன.

குறிந்த நிகழ்வானது நாளை செவ்வாய்க் கிழமை மாலை 3 மணிக்கு பொது சன நூலக கேட்போர் கூடத்தில் ஆரம்ப மாகி நடைபெறவுள்ளது.

இந்த நூல் வெளியிட்டு விழாவுக்கு யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமை தாங்கவுள்ளார்.

## கண்டாவளைப் பாலத்தைப் புனரமைத்த இளைஞர்கள்



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் அலுவளகத்திற்கு மிக அண்மித்துள்ள பாலமானது பல வருடகாலமாகப் புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் மக்கள் தற்காலிகப் பாதையினை பயன்படுத்திவந்தனர்.

தற்பொழுது தற்காலிகப் பாதையும் மக்கள் பயணிக்கமுடியாத நிலைக்கு வந்துவிட்ட நிலையில், அரசாங்கத்தினால் பல தடவைகள் முறையிட்டபோதும் சேதம் அடைந்துள்ள பாலம் திருத்தப்படவில்லை என மக்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், நேற்று ஞாயிற்றுக் கிழமை, தருமபுரப் பகுதி இளைஞர் அணியினர் ஒன்றுதிரண்டு, தமது சொந்த நிதியினைப் பயன்படுத்தித் தற்காலிகமாகப் பாலத்தின் சேதமடைந்த பகுதிகளைப் புனரமைப்புச் செய்து, இலகுவான போக்குவரத்திற்கு வழிசமைத்துள்ளனர்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


# தென்கொரியா சுரங்கப்பாதையில் வெள்ள அனர்த்தம் - 13 உடல்கள் மீட்பு

மத்திய தென்கொரியாவின் சியோங்ஜு நகரத்தில் வெள்ளம் சூழ்ந்த சுரங்கப் பாதையில் சிக்கிய பயணிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள மீட்புப் படையினர் 13 பேரின் உடல்களை மீட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு, ஆற்று வெள்ளம் சுரங்கப் பாதையின் வெடிப்புப் பகுதியினூடாக சுரங்கப் பகுதிக்குள் புகுந்தது. இதனால், அதன் வழியாகப் பயணித்த மக்கள் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டனர்.

இந்த நிலையில், 685 மீற்றர் நீளம் கொண்ட குறித்த சுரங்கப் பாதையில் 15 வாகனங்கள் சிக்கியிருப்பதாகவும், சிக்கியவர்களின் எண்ணிக்கை தொடர்பில் கணக்கிட முடியாமல் இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தென்கொரியாவில் கடந்த ஒரு வாரமாகப் பெய்துவரும் தொடர் மழையினால் குறைந்தது 39 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தொடரும் மழையால் வெள்ளம், நிலச்சரிவு என்பன ஏற்பட்டுள்ளதோடு, மின்சாரம் துண்டிக்கப்பட்டுமுள்ளது.

வார இறுதி வெள்ளத்தின் பிறகு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில், ஒன்பது பேராவது காணாமல் போயிருக்கலாமென என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுரங்கப்பாதையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட ஓசோங்கின் புறநகர்ப் பகுதியில், பேருந்துக்குள் இருந்தும் பல உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.




உயிர் பிழைத்த ஒன்பது பேர் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டதாகவும் அவர்கள் மருத்துவ சிகிச்சையில் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (மி)

## அலாஸ்கா தீபகற்பத்தில் நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது

அமெரிக்காவின் அலாஸ்கா தீபகற்பத்தில் 7.4 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் பதிவாகியதையடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை அலாஸ்காவின் சாண்ட் பொயிண்ட் என்ற பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் அசைவுக்குள்ளாகின. இதனால் அச்சமடைந்த பொதுமக்கள் அவ்விடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்த நிலநடுக்கம் 9.3 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாகத் தெரிவித்துள்ள அமெரிக்க புவியியல் ஆய்வு மையம், அலாஸ்காவில் சில பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கையை விடுத்துள்ளது.

கடந்த 1964 ஆம் ஆண்டு அலாஸ்காவில் 9.2 ரிச்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியில், 250 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (மி)

## ஸ்பெயினில் வேகமாகப்பரவும் காட்டுத்தீ 4,500 ஹெக்டெயர் நிலம் தீயினால் அழிவு



ஸ்பெயினில் வேகமாகப் பரவி வரும் காட்டுத்தீயினால் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். காட்டுத் தீ பரவிய பகுதிகளுக்கு அருகில் வசிக்கும் மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஸ்பெயினின் லா பால்மா தீவு மற்றும் அண்மைய பிரதேசங்களிலிருந்து சுமார் நான்காயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 4,500 ஹெக்டெயர் நிலம் தீயினால் அழிந்துள்ளதாகவும், தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் கடும் பிரயத்தனத்துடன் ஈடுபட்டுள்ளதாகவும் ஸ்பெயின் செய்திகள் கூறுகின்றன. (மி)

## ஈரானில் பெண்களுக்கு மீண்டும் ஆடைக் கட்டுப்பாடு மீறுவோர் கைது செய்யப்படுவார்கள் என அறிவிப்பு

ஈரானின், குர்திஸ்தானைச் சேர்ந்த 22 வயதுடைய இளம் பெண் மாஹ்சா அமினி, கடந்த ஆண்டு தெஹ்ரானில் உள்ள உறவினரைச் சந்திக்கச் சென்றபோது, அவர் முறையாக ஹிஜாப் அணியவில்லை எனக்கூறி, ஆடைக் கட்டுப்பாட்டைக் கண்காணிக்கும் கலாசாரப் பொலிசார் அவரைக் கைது செய்திருந்தனர்.

இதன்போது மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டதில் அவர் உயிரிழந்தார். அதைக் கண்டித்து மிகப் பெரிய போராட்டம் வெடித்தது. இதில் 500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 20,000 க்கும் மேற்பட்டோர் சிறையில் அடைக்கப்பட்டனர். பொலிசார் ஆடைக் கண்காணிப்பை கைவிட்டதால் அமைதி திரும்பியது.

இந்த நிலையில், ஈரானில் பெண்களுக்கு ஆடைக் கட்டுப்பாடு மீண்டும் அமலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



ஆடைக் கட்டுப்பாட்டு விதிகளைக் கண்காணிக்க பொலிசார் ரோந்து செல்வார்கள். விதிகளை மீறுவோர் கைதுசெய்யப்படுவார்கள், என காவல்துறை உயர் அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

இந்த விடயம் ஈரானில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தலாம் என அஞ்சப்படுகிறது.

## உலகின் பல பகுதிகளில் உயரும் வெப்பநிலை - நாசா எச்சரிக்கை!

எல் நினோ தாக்கத்தால் உலகின் பெரும்பாலான பகுதிகளில் வெப்பநிலை தொடர்ந்து உயர்வடைந்து வருகின்றது.

இந்த நிலையில், கடந்த ஜூன் மாதத்திலேயே அதிகளவு வெப்பம் பதிவாகியுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

ஜூன் 2023 க்கான உலகளாவிய சராசரி வெப்பநிலை 1951 முதல் 1980 ஜூன் வரையிலான சராசரியை விட 1.07 பாகை செல்சியஸ் அதிகமாக இருந்ததாக நாசாவின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இது, மனித நடவடிக்கைகளின் விளைவாகவும், முக்கியமாக கார்பன் டை ஒக்சைட் உமிழ்வுகளின் காரணமாகவும் அதிகரித்து வரும் உலகளாவிய வெப்பநிலையின் ஒரு பகுதி, என நாசா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (மி)



## ஜப்பானில் புதிய வகை பழம் அறிமுகமானது!

உலக மக்கள் இதுவரை ருசி பார்க்காத புதிய வகைப் பழத்தை ஜப்பானிய விவசாயிகள் குழுவொன்று உற்பத்தி செய்துள்ளது.

முதன்முறையாக சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ள இந்த பழம், எலுமிச்சை தர்பூசணி என்னும் பெயரில் அழைக்கப்படுகின்றது.

எலுமிச்சை மற்றும் தர்பூசணிச் செடிகளை இணைத்து, இந்தக் கலப்பினப் பழத்தை உற்பத்தி செய்வதில் ஜப்பானிய விவசாயிகள் வெற்றிபெற்றுள்ளனர்.

இந்தப் புதிய பழத்தை உண்பவர், புளிப்புத் தன்மையுடன் கூடிய இனிப்பை உணர்வார் என்று ஜப்பானிய விவசாயிகள் கூறுகின்றனர்.


ஜப்பானிய சந்தையில் இந்தப் பழத்தின் விலை 23.30 அமெரிக்க டொலர்கள் ஆகக் காணப்படுகின்றது. இலங்கை நாணய மதிப்பில் இது கிட்டத்தட்ட 7,500 ரூபாவாகும்.

## இந்தியாவின் முத்தரப்பு நெடுஞ்சாலைத் திட்டம் மியான்மர், தாய்லாந்துடன் ஜெய்சங்கர் பேச்சு

முத்தரப்பு நெடுஞ்சாலைத் திட்டம் குறித்து மியான்மர், தாய்லாந்து நாடுகளின் அமைச்சர்களுடன் இந்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். பாங்கொக்கில் நேற்று நடந்த மேகாங்- கங்கா ஒத்துழைப்புக்கான திட்டம் பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பங்கேற்றார். இதில், மனித மற்றும் போதைப் பொருள் கடத்தல் விவகாரங்களைப் பற்றி அவர் உரையாற்றியிருந்தார்.

சமீப காலங்களில் சவால்களைச் சந்தித்த திட்டங்களின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தப்பட்டது. இந்தியா -



மியான்மர்- தாய்லாந்து முத்தரப்பு நெடுஞ்சாலை பற்றியும் வலியுறுத்தப்பட்டது. மியான்மரில் உள்ள சூழ்நிலையின் காரணமாக இந்தத் திட்டம் மிகவும் கடினமானதாக உள்ளது, - என டுவிட்டரில் அவர் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவில் மக்களுக்கு காணிகளை பகிர்ந்தளிக்குமாறு ஜனாதிபதி உத்தரவு!

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களம் எல்லைகளைக் கோடிட்டு ஒதுக்கிக் கொண்ட 29 ஆயிரம் ஏக்கர் நிலத்தை திணைக்களத்தின் பொறுப்பில் இருந்து விடுவித்து, மக்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு ஜனாதிபதி செயலகம் அனைத்துத் தரப்பினருக்கு அறிவித்துள்ளது.

வனப் பாதுகாப்புத் திணைக்களம், மகாவலி அதிகார சபை மற்றும் தொல்லியல் திணைக்களம் என்பன முல்லைத்தீவு மக்களுக்குச் சொந்தமான சுமார் ஒரு லட்சம் ஏக்கர் நிலத்தில் எல்லைகளை நிர்ணயித்து பலவந்தமாக கைப்பற்றியுள்ளதாக, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது கிராம சேவகர்கள், மாகாணப் பொது அமைப்புகள் தெரிவித்திருந்தன.

இது தொடர்பான அறிக்கை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், அந்த நிலங்களை விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரடியன்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை மேற்கு, மணலாறு பிரதேசங்களில் உள்ள காணிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளன.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள காணி சம்பந்தமான தேசியக் கொள்கையை உருவாக்கும் குழுவிற்கு முல்லைத்தீவு மக்கள் மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

குறித்த 29 ஆயிரம் ஏக்கர் காணிகளுக்கு மேலதிகமாக 17 ஆயிரம் ஏக்கர் காணிகளில் விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட வனப் பாதுகாப்பு அதிகாரிகள் தடைவிதித்துள்ளதாக முல்லைத்தீவு மக்கள் அந்த




மகஜரில் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதி செயலகத்தினால், மக்களுக்குக் காணிகளைப் பகிர்ந்தளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மண்கும்பான் மாணவி அதிபரால் தாக்கப்பட்டமை விசாரிக்கச் சென்ற அதிகாரிகள் மீதும் தாக்குதல்!



யாழ்.தீவக வலய பாடசாலை ஒன்றில் அதிபரினால் மாணவி ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இன்று காலை பாடசாலையில் விசாரணைகளை நடத்தச் சென்ற கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவகம் மண்கும்பான் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கடந்த புதன்கிழமை தரம் நான்கில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் மீது பாடசாலை அதிபர் தாக்கியதாக பெற்றோரினால் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்றைய தினம் குறித்த அதிபர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், இன்று காலை தீவகக் கோட்டக் கல்வி அதிகாரிகள் சிலர் பாடசாலையில் விசாரணைகளை மேற்கொள்ளச் சென்றிருந்த நிலையில் அங்கு கூடியிருந்த பொதுமக்கள் கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அச்சுவேலியில் பெற்றோல் ஊற்றி தற்கொலைக்கு முயற்சித்த நபர்



*யாழ்.அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள காணியில் தனக்குத்தானே பெட்ரோலை ஊற்றிக் கொண்டு தற்கொலைக்கு முயன்ற நபரை பொலிஸார் தடுத்துக் காப்பாற்றியுள்ளனர்.*

*கடந்த ஒரு வாரத்திற்கு முன் ஆவரங்கால் சர்வோ தயா பகுதியில் 18 வயது இளைஞன் ஒருவன் அயல் வீட்டுப் பெண்ணை காதலித்து, இருவரும் சுய விருப்பில் திருமணம் செய்யச் சென்றுள்ளனர்.*

*இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பெண் வீட்டார், குறித்த இளைஞனின் வீட்டுக்குச் சென்று தாக்குதலை மேற்கொண்டு சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது.*

*இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞனின் வீட்டார் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, பெண்ணின் தந்தை மற்றும் பெரிய தந்தை இருவரும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் முற்படுத்தப்பட்டனர். பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.*

*சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 5 சந்தேகநபர்களைக் கைதுசெய்ய நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு வழங்கியுள்ளது. அதனடிப்படையில் குறித்த 5 சந்தேக நபர்களையும் இன்று பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு பொலிஸார் அறிவித்திருந்தனர்.*

*இந்த நிலையிலேயே, தவறு செய்யாத தாம் ஏன் முன்னிலையாக வேண்டும்? என்று கேள்விகளை எழுப்பியதோடு, தனது மகளை அவதூறாகப் பேசிய அயல் வீட்டார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் கூறி தனக்குத்தானே பெற்றோலை ஊற்றி குறித்த நபர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.*

*இந்தச் சம்பவத்தால் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் பரபரப்பான நிலையேற்பட்டது. தற்கொலைக்கு முயன்ற நபர், காதலித்து திருமணம் செய்யச் சென்ற பெண்ணின் பெரிய தந்தை எனக் கூறப்படுகிறது.*

## யாழ் – சென்னை நாளாந்த விமான சேவை ஆரம்பம்




யாழ்ப்பாணத்திற்கும் சென்னைக்கும் இடையில் இந்தியாவின் அலையன்ஸ் எயார் நிறுவனத்தின் நாளாந்த விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சேவையானது, யாழ்ப்பாணத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான நாளாந்த விமான சேவைகளை அதிகரிக்கும் என்றும் வடக்கின் பொருளாதாரத்தை உயர்த்தும் என்றும் இலங்கை விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிய கால அட்டவணையின் ஒரு பகுதியாக, இந்தியாவில் இருந்து விமானம் 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றின் காரணமாக யாழ்ப்பாணத்திற்கான விமான சேவைகளை இடைநிறுத்திய அலையன்ஸ் எயார் நிறுவனம், கடந்த ஆண்டு டிசம்பரில் மீண்டும் சேவைகளைத் தொடங்கியது.

கடந்த ஜூன் மாதம் வரை, கொரியர் சேவை மூலம் சென்னை மற்றும் யாழ்ப்பாணத்துக்கு இடையே 12,000 க்கும் மேற்பட்ட பயணிகள் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் புதிய பெயர்ப் பலகை திறப்பு!

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கான புதிய பெயர்ப்பலகை நேற்று திறந்துவைக்கப்பட்டது.

காரைதீவைச் சேர்ந்த மார்க்கண்டு வித்தியானந்தன் அவரது அமரத்துவம் அடைந்த குடும்ப உறவுகள் சார்பாக இந்த பெயர்ப்பலகையை நிறுவ உதவியுள்ளார்.

பெயர்ப்பலகைத் திறப்பு விழாவில், ஆலய பரிபாலன சபையின் தலைவர் கி.ஜெயசிறில் , ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா, அனுசரணையாளர் மா.வித்தியானந்-




தன் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் த. மோகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியில் இருந்து மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு வயல்வெளி ஊடாகச் செல்லும் பாதையின் ஆரம்பத்தில் இந்தப் புதிய பெயர்ப்பலகை நாட்டப்பட்டிருக்கின்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.07.2023இல் வெளியிடப்பெற்றது.